


**22. 08. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் படைப்பாற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தொ◌ிவித்துள்ளார்.

2. சென்னை நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அனைவருக்கும் சம வாய்ப்பு, பாதுகாப்பான சூழல் கிடைக்க உறுதியேற்போம் என்றும் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் குறிப்பிட்டுள்ளார்.

3. சிறுபான்மையின நலத்திட்டங்கள் தமிழகத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் திரு. ஷாஜஹான் கூறியுள்ளார்.

4. கால்நடை பராமரிப்புத் துறையில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாக அமைச்சர் திருமதி. கமலி அறிவித்துள்ளார்.

5. உலக கோப்பை ஹாக்கி தொடரில் இந்திய ஆடவர் அணி நெதர்லாந்தை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

நாட்டின் படைப்பாற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தொ◌ிவித்துள்ளார்.

கோவாவில் நடைபெறவுள்ள 57-வது சர்வதேச திரைப்பட விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இளையோர்களின் திறன் மற்றும் புத்தாக்கத்திற்கு உரிய

வாய்ப்புகளை வழங்கி சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகளில் அரசு உறுதிப்பூண்டுள்ளதாக கூறினார்.

படைப்பாற்றல் திறனுடன் கூடிய இளைஞர்கள், நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க கலாச்சாரங்களுடன் அறியப்படாத சுதந்திர போராட்ட வீரர்களை வெளிக்கொணர வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் 2 நாள் பயணமாக நாளை ரஷ்யா புறப்படுகிறார்.

இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல் தொழில்நுட்பம், கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் 27-வது இந்தியா – ரஷ்யா கூட்டு ஆணையக் கூட்டத்தில் திரு. ஜெய்சங்கர் உரையாற்றுகிறார்.

தொடர்ந்து ரஷ்ய வெளியுறவு அமைச்சருடன் பரஸ்பர மற்றும் சர்வதேச முக்கியத்துவம் சார்ந்த விஷயங்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஊரக வாழ்வாதாரம்

நாடுமுழுவதும் மகளிர் சார்ந்த ஊரக தொழில்முனைவோர் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார உறுதியளிப்பு திட்ட செயல்பாடுகளின் கீழ் புதுதில்லியில் நடைபெற்ற பண்ணை சாரா வாழ்வாதாரம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் வளர்ச்சி சார்ந்த உயர் முன்னுரிமை வர்த்தக நடவடிக்கைகளை விரைவுப்படுத்துவதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

சுகாதார அமைச்சகம்

4 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு Phenylephrine, Chlor Pheniramine Maleate மருந்துகள் நேரடியாகவோ, கலவையாகவோ அளிக்கப்பட கூடாது என்று மத்திய சுகாதார அமைச்சகம் தொிவித்துள்ளது.

அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் இப்பொருட்கள் அடங்கிய இருமல் மருந்துகள் உள்ளிட்ட அனைத்து மருந்து பொருட்களில் 4 வயதிற்குபட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்பட கூடாது என்ற எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெற வேண்டுமென கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

சென்னை தினம்

சென்னை தினம் இன்று கடைப்பிடிக்கப்படுவதை ஒட்டி முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வாழ்த்து தொிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வளர்ச்சிப்பெற்று வரலாற்றுச் சிறப்பும், பண்பாட்டு பெருமையும் நிறைந்த சென்னை நகரை நவீன உட்கட்டமைப்புகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த சீர்மிகு பெருநகரமாக உருவாக்குவோம் என்று தொிவித்துள்ளார்.

அனைவருக்கும் சம வாய்ப்பு, பாதுகாப்பான சூழல் கிடைக்க உறுதியேற்போம் என்றும் முதலமைச்சா குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேசிய நல்லாசிரியர் விருது

தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்க பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த 2 ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வாழ்த்து தொிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. எம். தங்கராஜ் மற்றும் மதுரை P. M. Sri கேந்திரிய வித்யாலயா ஆசிரியை திருமதி. ஜே. அமுதாவிற்கு கிடைத்துள்ள இந்த உயரிய அங்கீகாரம்

தமிழ்நாட்டின் கல்விச் சிறப்பிற்கும், அனைத்து ஆசிரிய சமூகத்திற்கும் மேலும் பெருமை சேர்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

அர்ப்பணிப்பு, புதுமையான கற்பித்தல், மாணவர் நலனில் முன்னேற்றம் உள்ளிட்டவற்றிற்காக நாடுமுழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 48 ஆசிரியர்களுக்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் வரும் 5-ம் தேதி ஆசிரியர் தினத்தன்று இவ்விருதுகளை வழங்குகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஷாஜஹான்

தமிழக அரசு சிறுபான்மையினர் நலனுக்கான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஷாஜஹான் தொ◌ிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அரசு பள்ளி மாணாக்கருக்கான 7.5 சதவிகித உள் ஒதுக்கீட்டை சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் விரைவுப்படுத்துவது தொடர்பாக பரிசீலனைகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

நெல்லை மாவட்டம் வெள்ளக்கோவில், குல வணிகர்புரம் பகுதிகளில் கல்லறைத்தோட்ட சுற்றுச்சுவர் உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்த ஒருகோடியே 36 லட்சம் ரூபாய் நிதி விரைவில் விடுவிக்கப்படும் என்றார்.

..வாய்ஸ் ..

கடந்த காலங்களை விட சிறுபான்மைனருக்கான நலத்திட்டங்கள் தமிழகத்தில் தற்போதுஅதிகமாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தொகுதி மறுவரையறை விவகாரத்தில் சில விதிகளை பின்பற்ற வேண்டிய தேவை இருந்ததாக கூறியஅவர், எனினும் சட்டப்பேரவையில் இது தொடர்பாக தங்களின் நிலைப்பாட்டை த.வெ.க. அரசு தெளிவாக விளக்கி உள்ளதாக அவர் தொ◌ிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கமலி

தமிழகத்தில் கால்நடை பராமரிப்புத் துறையில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாக மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி. கமலி தொ◌ிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு சுகாதார விழிப்புணர்வு முகாமை தொடங்கிவைத்து பேசியஅவர், நாட்டின மாடுகள் வளர்க்கும் ஆர்வமுடையவர்களுக்கு பவானி சாகர் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் தரமான கன்றுகள் வழங்கப்படுவதாக கூறினார்.

எல்நினோ பாதிப்பால் ஏற்பட்டுள்ள வறட்சியால் தீவன தட்டுப்பாடு நிலவும் சூழலில் பசுந்தீவனம் வளர்க்க போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தொ◌ிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஸ்ரீநாத்

தமிழகத்தில் அம்மா உணவகங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஸ்ரீநாத் தொ◌ிவித்துள்ளார்.

தூத்துக்குடி அம்மா உணவகத்தை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், வரும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பேரிடர் மேலாண்மைத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கீர்த்தனா

அரசின் இலவச ஆடு வளர்ப்பு திட்டத்தை கிராமப்புற மகளிர் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா தொ◌ிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பாப்பாக்குடியில் நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார விழிப்புணர்வு முகாமில் உரையாற்றிய அவர்,

இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய மகளிருக்கு 5 ஆடுகள் வழங்கப்படுவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. ஜெகதீஸ்வரி கிராமப்புற மேம்பாடு, பொருளாதார வளர்ச்சியில் கால்நடைகள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நிர்மல் குமார்

மதுரை சின்ன சொக்கிகுளத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடத்தை மாநில எரிசக்தி துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் இன்று திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தி.மு.க. செயற்குழு கூட்டம்

தி.மு.க. செயற்குழு கூட்டம் கட்சித்தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

மாவட்ட செயலாளர்களுக்கு வயது உச்சவரம்பு நிர்ணயம் உள்ளிட்ட 9 தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖

ரேகா குப்தா

மாணாக்கர் A I தொழில்நுட்பத்தை பயன்படுத்துபவர்களாக மட்டுமின்றி அதன்மூலம் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டுமென்று டெல்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் தனியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டங்களை வழங்கி பேசிய அவர், செயற்கை நுண்ணறிவின் மூலம் நாட்டின் கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டுமென்றும், மாணாக்கர் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் மாயைகளை தங்கள் இயல்பு வாழ்வுடன் ஒப்பிட்டு தன்னம்பிக்கையை இழக்கக்கூடாது என அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருப்பூர்

திருப்பூரில் பின்னலாடை இயந்திர கண்காட்சி நடைபெற்று வருகிறது.

500-க்கும் மேற்பட்ட அரங்குகளில் நிட்டிங், எம்ராய்டரி, பேக்கிங் உள்ளிட்ட பின்னலாடை உற்பத்திக்கு தேவையான அதிநவீன இயந்திரங்கள் இதில் காட்சிபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி

தூத்துக்குடி திரேஸ்புரம் மீன்பிடி துறைமுகத்தில் மீன்வரத்து அதிகரித்து காணப்படுவதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

2027-ம் ஆண்டிற்கான ஹஜ் புனித பயணத்தில் ஆய்வாளர்களாக பணியாற்ற விரும்பும் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஸ்ரீகாந்த் தொ◌ிவித்துள்ளார்.

தகுதியுடையோர் வரும் 27-ம் தேதிக்குள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் பௌத்த மதத்தை சார்ந்தவர்கள் விஜயதசமி தினத்தன்று நாக்பூர் தீக்ஷா பூமி திருவிழாவில் பங்கேற்க வரும் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா தொ◌ிவித்துள்ளார்.

இவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 5 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

8-ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை படித்த ஏராளமானோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் ஒரத்தூரில் 5 ஆயிரம் பனைவிதைகள் நடும் பணிகளை ஆட்சித்தலைவர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

நெதர்லாந்தில் நடைபெறும் உலக கோப்பை ஹாக்கி தொடரில் இந்திய ஆடவர் அணி, தனது இரண்டாவது போட்டியில் நடப்பு சாம்பியன் நெதர்லாந்தை இன்று இரவு எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

புதுதில்லியில் நடைபெறும் உலக பேட்மிண்டன் சாம்பியன்பட்ட போட்டியின் மகளிர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை – சீன இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖